15.04.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### மேட்டூர் அணையிலிருந்து நீர் திறப்பு அதிகரிப்பு

மேட்டூர் அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்கு தண்ணீர் திறந்துவிடுவது நொடிக்கு 1,500 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடுவது நிறுத்தப்பட்டதும், குடிநீருக்காக தண்ணீர் திறந்துவிடுவது வழக்கம். கடந்த பிப்ரவரி 25-ஆம் தேதி மேட்டூர் அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடுவது நிறுத்தப்பட்டது.

இதையடுத்து மார்ச் 1-ஆம் தேதி முதல் குடிநீருக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. கடந்த 10 நாள்களாகக் குடிநீருக்கு மேட்டூர் அணையிலிருந்து நொடிக்கு 1000 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இந்த நிலையில் செவ்வாய்கிழமை மாலை 6 மணி முதல் குடிநீருக்கு தண்ணீர் திறந்துவிடுவது நொடிக்கு 1,500 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து புதன்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 55.31 அடியாக இருந்தது.

அணைக்கு நொடிக்கு 102 கன அடி வீதம் தண்ணீர் வந்துகொண்டிருந்தது. அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்கு நொடிக்கு 1,500 கனஅடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 21.32 டி.எம்.சி.யாக இருந்தது.

**மீன்பிடி தடைக் காலம் தொடக்கம்**

மாவட்டத்தில் மீன்பிடி தடைக் காலம் வியாழக்கிழமை நள்ளிரவு முதல் தொடங்கியது.

ஆழ்கடல் பகுதியில் மீன்கள் இனப்பெருக்கம் செய்யும் காலம் என்பதால், ஏப்ரல் 15 முதல் மே 29ஆம் தேதி வரை மொத்தம் 45 நாள்கள் மீன்பிடிக்க தடை விதித்து அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவு வியாழக்கிழமை நள்ளிரவு முதல் அமலுக்கு வந்தது.

இதையொட்டி, கடலூர் மாவட்டத்தில் ஆழ்கடலில் மீன்பிடிக்கப் பயன்படுத்தப்படும் விசைப் படகுகள், பைபர் படகுகளை 45 நாள்களுக்கு துறைமுகப் பகுதிகளிலும், கரையோரங்களிலும் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கத் தேவையான ஏற்பாடுகளை மீனவர்கள் செய்து வருகின்றனர். மீன்பிடி தடைக் காலத்தை பயன்படுத்தி, பழுதடைந்த படகுகள் மற்றும் வலைகளை சீரமைக்கவும் மீனவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

**மாவட்டத்தில் மீன்பிடி தடைகாலம் தொடக்கம்**

விழுப்புரம் மாவட்டத்திலும் மீன்பிடி தடை காலம் தொடங்கியதால் 19 மீனவ கிராமத்தினர் மீன்பிடி பணிகளை நிறுத்தி படகு சீரமைப்பில் ஈடுபட உள்ளனர்.

கடல் வளத்தைப் பாதுகாக்கவும், மீன்வளத்தைப் பெருக்கும் விதத்தில் நாடு முழுவதும் மீன் பிடி தடை காலத்தை அமல்படுத்தி மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த காலங்களில் மீனவர்களுக்கான உதவித் தொகையையும் அரசு வழங்கி வருகிறது.

மீன் இனத்தை பாதுகாக்கும் வகையில், ஆண்டு தோறும் இனவிருத்தி காலமான ஏப்ரல் 15 முதல் மே இறுதி வரை, மீன் பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டு வருகிறது.

இந்தாண்டுக்கு மீன் பிடி தடைகாலம் ஏப்.15ல் தொடங்குகிறது. தொடர்ந்து மே 29-அமலில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலங்களில் ஆழ்கடலில் மீன்பிடிக்கும் சுருக்குமடி வலை, இரட்டை மடி வலை போன்றவற்றை பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வலைகளினால், மீன் குஞ்சுகளும் பிடிக்கப்பட்டு மீன் வளம் வெகுவாக பாதிக்கும் என்பதால், இந்த தடை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தடை காலம் தொடங்கியுள்ளதால், விழுப்புரம் மாவட்டத்தில், மரக்காணம் ஒட்டியுள்ள 19 கடலோர மீனவ கிராமங்களில், மீனவர்கள், தடை காலம் வரை ஆழ்கடலுக்குச் செல்லாமல் மீன்பிடி தொழிலை கைவிட்டு, படகுகளை சீரமைத்தல், புதிய வலைகளை தயாரித்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள உள்ளனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வீணாக்காத வடஇந்தியா**

வட இந்தியாவில் புளியின் பயன்பாடு அன்றாடச் சமையலில் குறைவாக உள்ளது. புளிக்குப் பதிலாக எலுமிச்சை சாறு, ஆம்சூர் பொடி ஆகியவற்றையே பயன்படுத்துவர். வெயில்காலத்தில் தான் மாங்காய் விளைச்சல் அதிகமாக இருக்கும்.இந்த மாங்காய்களை வீணாக்காமல் சூரிய ஒளியில்காய வைத்து பொடி செய்கின்றனர். இதனை 'ஆம்சூர்' பொடி என்ற பெயரில் வர்த்தகரீதியாக ஆண்டு முழுவதும்விற்கின்றனர். தென்னிந்தியாவில் மாங்காய்க்கு அதிக விளைச்சல் காரணமாக விலை இல்லாமல் போகின்றது.மிகக் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய கட்டாயம் மாங்காய் விவசாயிகளுக்கு ஏற்படுகிறது.

**தேயிலை தோட்டத்தில் 'சில்வர் ஓக்' இருந்தால் நோயில்லை கோடை காலத்தில் பிரச்னை வராது**

மஞ்சூர்: 'தேயிலை தோட்டங்களில் சில்வர் ஓக் மரங்களை நடவு செய்து, பராமரித்து கொள்ள வேண்டும்' என, சிறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நீலகிரியில், ஊட்டி,குன்னுார், கோத்தகிரி, குந்தா, கூடலுார், பந்தலுார் உள்ளிட்ட, 6 தாலுகா பகுதிகளில், 80 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு, குறு விவசாயிகள் தேயிலை தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

இதில், தேயிலை தோட்டங்களை உரம் இட்டு பராமரித்து கொள்வது ஒருப்புறம் இருந்தாலும், தேயிலை தோட்டம் நடுவே 'சில்வர் ஓக்' மரம் வளர்ப்பதன் மூலம் பல்வேறு நன்மைகள் ஏற்படுகின்றன.

இந்த மரங்களால், தேயிலை தோட்டங்களில் நிழல், ஈரப்பதம் கிடைப்பதால், சிவப்பு சிலந்தி தடுப்பது போன்றவற்றால் தேயிலை செடிகளுக்கு நல்ல சீதோஷ்ண நிலை கிடைக்கிறது.

குறைந்து வரும் மரங்கள்

மாவட்டத்தில் வனத்துறை மூலம் முறையான அனுமதி பெற்று, சில்வர் ஓக் மரம் வெட்ட சிறு விவசாயிகளுக்கு அனுமதி கொடுக்கப்படுகிறது. அதன்படி, குழந்தைகளில் படிப்பு, மருத்துவம், திருமண நிகழ்ச்சி உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான இடங்களில் சில்வர் ஓக் மரங்கள் அதிகளவில் வெட்டப்பட்டு வருகிறது. இதனால், மரங்கள் வெகுவாக குறைந்து வருகின்றன.

தற்போதைய கணக்கெடுப்பில், ' ஐந்து லட்சம் அளவுக்கு தேயிலை தோட்டங்களுக்கான மரம் தேவைப்படுகிறது' என, தெரியவந்துள்ளது. இதனால், வனத்துறையிடம், தேயிலை தோட்டங்கள் குறித்து ஆவணங்களை சமர்ப்பித்தால், இலவச நாற்று வழங்கப்பட்டு வருகிறது.

இது குறித்து தேயிலை வாரிய உதவி இயக்குனர் ரமேஷ் கூறுகையில், “தற்போது கோடை அதிகரித்து வருவதால், தேயிலைக்கு நிழல் தரும் மரங்கள் அவசியம். மரம் இல்லையெனில், தேயிலையை பல நோய்கள்

பாதிக்கும். வெப்பத்தால் கருகவும் வாய்ப்புள்ளது. இரண்டரை ஏக்கர் தேயிலை தோட்டத்தில்,

10 ஆயிரம் சில்வர் ஓக் மரக்கன்றுகளை நடவு செய்யலாம், முறையாக சில்வர் ஓக் மரக்கன்று நடவு செய்து தேயிலை தோட்டங்களை பராமரித்தால், நல்ல மகசூல் கிடைப்பதுடன், தேயிலை தோட்டமும் நன்றாக இருக்கும். இதனால்,
சிறு விவசாயிகள் மர நாற்று
களை வாங்கி தேயிலை தோட்டங்களில் நடவு செய்ய வேண்டும்," என்றார்.

## கூடலூரில் காபி பூக்கும் காலம்

கூடலூர் : கூடலூரில், காபி பூத்துள்ள நேரத்தில், கோடை மழை பெய்யாததால், மகசூல் பாதிக்கும் அபாயம் உள்ளது.
கூடலூர், பந்தலூர் பகுதிகளில், தேயிலைக்கு அடுத்தபடியாக விவசாயிகள் காபி உற்பத்தியில் அதிகம் ஈடுப்பட்டு வருகின்றனர். இங்கு சிறிதும் பெரிதுமாக, சுமார் 15 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் காபி பயிரிடப்பட்டுள்ளது. இதில், 11 ஆயிரம் ஏக்கர் 'ரொபஸ்டா' காபியும், 4000 ஏக்கர் 'அரேபிக்கா' காபியும் பயிரிட்டுள்ளனர். ரொபஸ்டா காபி செடிகளில் பிப்ரவரி மாதத்திலும், அரேபிக்கா காபி செடிகளில், ஏப்ரல், மே மாதத்தில் பூ பூக்கும். தற்போது, அரேபிக்கா காபி செடிகளில், பூ பூத்து தோட்டம் வெண்மையாக காட்சி அளிக்கிறது.
விவசாயிகள் கூறுகையில், 'காபி பூ பூக்கும் போது, கோடைமழை மிகவும் அவசியமாகும். ஆனால், தொடரும் வறட்சியினால், மகசூல் பாதிக்கும் சூழல் உள்ளது' என்றனர்.

## ஏமாற்றிய கோடை மழையால் உச்சத்தில் காய்கறிகளின் விலை

பழநி:போதிய மழையில்லாத காரணத்தால் காய்கறி விளைச்சல் பழநி பகுதியில் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் சந்தையில் கிலோ ரூ.8க்கு விற்ற தக்காளி தற்போது கிலோ ரூ.17 வரை விற்கப்படுகிறது. பழநி பகுதியில் கணக்கன்பட்டி, கோம்பைபட்டி, கரடிகூட்டம், தாமரைக்குளம்,

கரிக்காரன்புதுார் உட்பட பல்வேறு பகுதிகளில், சொட்டுநீர்ப்பாசனம், கிணற்றுப்பாசனம் மூலம் தக்காளி, கத்திரிக்காய், முட்டைக்கோஸ், காலிபிளவர் சாகுபடி செய்கின்றனர்.

தற்போது வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது. மேலும் கோடை மழை பெய்யாத காரணத்தால் தக்காளி, கத்தரிக்காய், காலிபிளவர், உருளை, பீட்ரூட், வெண்டை உள்ளிட்ட காய்கறிகளின் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மார்க்கெட், உழவர் சந்தைக்கு வரத்துகுறைந்துள்ளது. ஒருவாரத்தில் கிலோ ரூ.4 முதல் ரூ.5 வரை விலை அதிகரித்துள்ளது. கடந்தவாரம் கிலோ ரூ. 7க்கு விற்ற தக்காளி தற்போது ரூ.18க்கும், வெண்டைக்காய் ரூ.15ல் இருந்து ரூ.20ஆகவும், பீட்ரூட் ரூ. 18ல் ரூ.20 ஆகவும் உயர்ந்துள்ளது.

உழவர் சந்தை காய்கறி நிலவரம்: (ஒரு கிலோ) கத்தரிக்காய் ரூ. 22, முருங்கைக்காய் ரூ. 5 முதல் 12, முட்டைக்கோஸ்-10, தக்காளி ரூ.14 முதல் 18, கேரட் ரூ.50, வெண்டைக்காய் ரூ.30, உருளைக்கிழங்கு ரூ. 26. நு?க்கல்-20. கருணைக்கிழங்கு-30, மாங்காய் ரூ.15, பச்சைமிளகாய் ரூ.48. முருங்கபீன்ஸ் ரூ.70 ஆக உள்ளது.

### கால்நடைகளை பாதி விலைக்கு விற்கும் விவசாயிகள்

க.பரமத்தி: க.பரமத்தி யூனியன் பகுதியில், வறட்சியின் கோரப் பிடியால் கால்நடைகளை, பாதி விலைக்கு விற்று வருகின்றனர். இப்பகுதியில் விவசாயிகள் ஒவ்வொருவரும் குறைந்தபட்சம், 25 முதல் 100 ஆடுகள் வரை வளர்த்து, அதன் மூலம் ஈன்றப்படும் குட்டிகளை வளர்த்து சந்தையில் விற்பனை செய்து குடும்பத்தை நடத்தி வருகின்றனர். வறட்சியின் கோரபிடியால் கோடை காலத்தில் எந்த பயிர்களும் பயிரிடுவதில்லை. ஆடுகளை பராமரிக்க முடியாத விவசாயிகள், சந்தையில் ஆடுகளை விற்க முன்வந்துள்ளனர். ஆடுகளை வாங்க சந்தைக்கு வரும் வெளியூர் வியாபாரிகள், பாதி விலைக்கு வாங்கி செல்கின்றனர்.

**வறட்சியிலும் வருவாய் ஈட்டலாம்: வேலை வாய்ப்பு தரும் கீரை சாகுபடி**

ஆண்டிபட்டி:ஆண்டிபட்டி அருகே எஸ்.எஸ்.புரத்தில் குறைந்தளவு நீரை பயன்படுத்தி பலவகை கீரை சாகுபடி செய்து விவசாயி விற்பனை செய்து வருகிறார். ஆண்டிபட்டி அருகே எஸ்.எஸ்.புரம் வறட்சியான பகுதி. மழை பெய்தால் மட்டுமே விவசாயம் என்ற நிலையில் உள்ள இப்பகுதியில் கிணற்று பாசனம் மூலம் குறைந்த அளவு நிலத்தில் பல ஆண்டுகளாக பல வகை கீரைகளை விளைவித்து வருவாய் ஈட்டுகிறார் விவசாயி ராம்தாஸ்.

மார்கெட்டில் மவுசு: கிணற்றில் சுரக்கும் குறைந்தளவு நீரை பயன்படுத்தி ஆண்டு முழுவதும் அரைக்கீரை, சிறுகீரை, பாலக்கீரை, மிளகுதக்காளி கீரை, அகத்திக்கீரை விளைவிக்கப்படுகிறது. இதற்கு அதிக முதலீடும் தேவை இல்லை. கூலியாட்கள் பிரச்னையும் இல்லை. ஒரு ஏக்கரில் பயிரிடப்படும் பல வகை கீரைகளை தனது மனைவியுடன் சேர்ந்து வளர்த்து, பராமரித்து தினமும் மார்க்கெட் கொண்டு சென்று விற்பனை செய்து வருகிறார். அன்றாடம் குறிப்பிட்ட நேரத்தில் கிடைக்கும் என்பதால் இவரது கீரைக்கு மார்க்கெட்டில் எப்போதும் மவுசுதான்.

இயற்கை உரத்தால் அமோகம்:

விவசாயி ராம்தாஸ், “கீரை விதைகளை விளைவித்து எடுப்பது சிரமமான வேலை என்பதால், கிலோ ரூபாய் ஆயிரம் வரையில் விற்கப்படும் விதைகளை வாங்கித்தான் பயன்படுத்த வேண்டும். ஒரு முறை நடவு செய்யப்படும் கீரை 15 நாளில் வளர்ந்து விடும். 15 நாளுக்கு ஒரு முறை தொடர்ந்து எடுத்து பயன்படுத்தலாம். கீரை விவசாயத்திற்கு இயற்கை உரங்கள் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. சில வகை பூச்சி தாக்குதலை சமாளிக்க அதற்கான பொடிகளை பயன்படுத்துகிறோம். மழை, பனி காலங்கள் கீரை சாகுபடி ஏற்றதல்ல.

இதனால் அக்டோபர் முதல் ஜனவரி மாதங்களில் கீரை விளைச்சல் தடைபட்டு விடும். வேலையாட்கள் தேவை இல்லை என்பதால் குடும்பத்தினருக்கான வேலை வாய்ப்பு கிடைக்கிறது. ஏக்கருக்கு ஒரு முறை 600 கிலோ வரை கிடைக்கும். தற்போது கீரைகள் கிலோ ரூபாய் 5 முதல் ரூ.10 வரை விலைபோகிறது. கீரைகளை மார்க்கெட்டில்

குறிப்பிட்ட நேரத்திற்குள் கொண்டு சென்றால் மட்டுமே விற்பனை சாத்தியமாகும். இல்லையேல் வாடிப்போகும். ஆரோக்கியம் தரும் கீரைக்கு என்றைக்கும் மவுசுதான். இந்த விவசாயத்தில் திருப்தி கிடைப்பதால் பல ஆண்டுகளாக இதனை தொடர்கிறேன். இவ்வாறு தெரிவித்தார்.

## ரூ.35 லட்சத்துக்கு பருத்தி வர்த்தகம்

நாமக்கல்: நாமக்கல் மற்றும் பரமத்தி, திருச்செங்கோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பகுதிகளில், 6,000 ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. அறுவடை செய்யப்படும் பருத்தி ரகங்கள், நாமக்கல் என்.சி.எம்.எஸ்., குடோனுக்கு வாரம் தோறும், வியாழக்கிழமை நடக்கும் ஏலத்துக்கு கொண்டு வரப்படும்.நேற்று நடந்த ஏலத்தில், 2,100 மூட்டை பருத்தி ஏலத்துக்கு கொண்டு வரப்பட்டது. அதில், ஆர்.சி.ஹெச்., குறைந்தபட்சம், 4,515 ரூபாய், அதிகபட்சம், 5,005 ரூபாய், டி.சி.ஹெச்., குறைந்தபட்சம், 5,771 ரூபாய், அதிகபட்சம், 6,529 ரூபாய், சுரபி ரகம் குறைந்தபட்சம், 4,609 ரூபாய், அதிகபட்சம், 5,259 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம், 2,100 மூட்டை பருத்தி, 35 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

## உழவுப்பணி துவக்கம்

சிங்கம்புணரி:தமிழ் புத்தாண்டு தினத்தையொட்டி சிங்கம்புணரி பகுதியில் நேற்று விவசாயிகள் உழவு பணி மேற்கொண்டனர். முறையூரில் விவசாயிகள் மருதவனக்கருப்பர் கோயிலில் ஒன்று கூடினர். பின் மீனாட்சி, சொக்கநாதர் கோயிலில் மணி ஓசை கேட்டவுடன், அனைவரும் சுவாமி தரிசனம் செய்தனர். பின் தங்கள் நிலங்களில் ஏர் கலைப்பை மூலம் உழவு செய்தனர்.

இதேபோல் கிருங்காக்கோட் டை, பிரான் மலை, மேலப்பட்டி, ஒடுவன்பட்டி விவசாயிகளும் உழவு பணி மேற்கொண்டனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

## வெயிலின் தாக்கம் அதிகரிப்பு இளநீர், தர்ப்பூசணி விற்பனை ஜோர்

சேலம், : சேலம் மாவட்டத்தில் வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், இளநீர், தர்ப்பூசணி விற்பனை அதிகரித்துள்ளது. உலகளவில், ஆண்டுதோறும் சராசரி வெப்பநிலை உயர்ந்து வருகிறது. வனங்கள் அழிப்பு, விளை நிலங்கள் வீட்டு மனைகளாக மாறி வருதல், நகரமயமாதல், பனிப்பாறை உருகுதல், கடல் மட்டம் உயர்தல் போன்றவற்றால் சராசரி வெப்பநிலை அதிகரிப்பதாக புவியியல், வானிலை ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். தமிழகத்திலும், ஆண்டுக்கு ஆண்டு சராசரி வெப்பநிலை உயர்ந்து வருகிறது. கடந்த ஆண்டு பருவமழை பொய்த்துப்போனதும், வெப்பநிலை அதிகரிப்புக்கு முக்கிய காரணமாக சொல்லப்படுகிறது.

வழக்கமாக சித்திரை மாதத்தில் மட்டுமே சொல்லப்படும் கத்திரி வெயிலின் தாக்கம், இப்போதே நிலவுவதாக மக்கள் கூறுகின்றனர். சேலம் மாவட்டத்தில் மார்ச் மாத துவக்கத்திலேயே 100 டிகிரியை வெயில் தொட்டது. இதையடுத்து, 100 டிகிரியை தாண்டி கடந்த சில நாட்களாக வெப்பம் பதிவாகியுள்ளது. நேற்று முன்தினம் 105 டிகிரியும், நேற்று 104.2 டிகிரியும் வெப்பம் பதிவாகி உள்ளது. வெயிலின் தாக்கம் காரணமாக சேலத்தில் பழச்சாறு கடைகள், தர்ப்பூசணி கடைகள், இளநீர் கடைகளில் மக்கள் கூட்டம் அதிகரித்துள்ளது. அதிகப்படியான உஷ்ணத்தால் உடலில் இருந்து அதிக வியர்வை வெளியேறி, சீக்கிரமே களைப்படையச் செய்துவிடுகிறது. இதனை தவிர்க்க மக்கள் பழச்சாறு, இளநீர் குடித்து தாக்கத்தை தணித்து வருகின்றனர். வெப்பநிலை அதிகரிப்பால் மதிய வேளைகளில் வழக்கத்தைவிட சாலைகளில் மக்கள் நடமாட்டம் குறைந்துள்ளது.

## சித்திரை திருநாள்நல் ஏர் கட்டி விவசாயிகள் வழிபாடு

புதுக்கோட்டை, : சித்திரை முதல் நாள் சித்திரை திருநாளாக தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. பொதுவாக சித்திரை முதல் நாளில் விவசாயிகள் நல் ஏர் கட்டி வழிபடுவது வழக்கம். கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக புதுக்கோட்டை மாவட்டத்தில் போதிய அளவுக்கு மழைப் பெய்யாமல் பொய்த்துப் போனதால் கடும் வறட்சி ஏற்பட்டது. இதனால் பெரும்பாலான இடங்களில் வறட்சியின் பிடியில் சிக்கிய பாசன நிலங்களால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இருந்தபோதும், பாரம்பரியத்தையும், கலாசாரத்தையும் விட்டுவிடக்கூடாது என்ற உயரிய நோக்கத்துக்காக புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் சித்திரை முதல் நாளை முன்னிட்டு நேற்று நல் ஏர்கட்டி சிறப்பு வழிபாடு மேற்கொண்டனர்.

குறிப்பாக கறம்பக்குடி, கந்தர்வக்கோட்டை, இலுப்பூர், விராலிமலை பகுதிகளில் அணி திரண்ட விவசாயிகள், கலப்பையில் பொட்டு வைத்து, ஏரில் பூட்டும் காளையை குளிப்பாட்டி சந்தனம், குங்குமத்தால் பொட்டு வைத்து மாலை அணிவித்து சிறப்பு வழிபாடு மேற்கொண்டு சாமி கும்பிட்டனர். இதையொட்டி, நவதானியங்களை நிலத்தில் பரவலாகத் தெளித்து உழவுப்பணியைத் துவங்கினர். பின்னர், விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் பிரசாதம் கொடுத்து மகிழ்ந்தனர்.

இதே போல், புதுக்கோட்டையில் உள்ள பிரகதம்பாள் கோயில், சாந்தநாத சுவாமி கோயில், திருக்கோகர்ணேஸ்வரர் கோயில், ஆலங்குடி பாலசுப்பிரமணிய சுவாமி கோயில், திருவரங்குளம் சிவன் கோயில், திருமயத்தில் உள்ள ஈராயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த சத்தியமூர்த்தி பெருமாள் கோயில், சிவன் கோயில், கோணாப்பட்டு மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில், பொன்னமராவதி அடுத்த கொன்னையூர் முத்துமாரியம்மன் கோயில், நார்த்தாமலை முத்துமாரியம்மன் கோயில், இலுப்பூர் தரம்தூக்கி பிடாரியம்மன் கோயில், விராலிமலை முருகன் கோயில், ஆவுடையார்கோவிலில் உள்ள சிவன் கோயில் உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள முக்கியக் கோயில்களில் சித்திரை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு பிறப்பாக நேற்று கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

இதையொட்டி, சில கோயில்களில் பஞ்சாங்கம் வாசிக்கப்பட்டு நடப்பு ஆண்டுக்கான பலன்கள் விளக்கிக்கூறப்பட்டது. தமிழ்ப் புத்தாண்டு பிறப்பையொட்டி, பிரசித்திபெற்ற கோயில்களில் மூலவர், உற்சவர் மற்றும் பரிவாரத் தெய்வங்களுக்கு அபிஷேக, அலங்கார தீபாராதனை நடைபெற்றது. இதை காண காலை முதலே கோயில்களில் பக்தர்கள் பெருந்திரளாகக் குவிந்திருந்தனர்.

**கண்வலி கிழங்கு கொள்முதல் நிலையம் அமைக்க கோரிக்கை**

பழநி, : ஒட்டன்சத்திரம் பகுதியில் கண்வலி கிழங்கு கொள்முதல் நிலையம் அமைக்ககோரி சிவசேனா கட்சியின் மாவட்ட இளைஞரணி தலைவர் ஸ்ரீதர் தமிழக முதல்வருக்கு மனு அனுப்பியுள்ளார். அந்த மனுவில், ஒட்டன்சத்திரம் பகுதியில் மார்க்கம்பட்டி, எல்லப்பட்டி, சின்னக்காம்பட்டி, கள்ளிமந்தையம் மற்றும் பல கிராமங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கர்களில் கண்வலி கிழங்கு செடி பயிரிடப்படுகிறது.

கண்வலி கிழங்கிற்கு மேலை நாடுகளில் நல்ல வரவேற்பு உள்ளது. இப்பகுதி விவசாயிகளால் டன் கணக்கில் கண்வலி கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டும் உரிய விலை கிடைக்காமல் ஏமாற்றம் அடைகின்றனர். எனவே, மார்க்கம்பட்டி அல்லது ஒட்டன்சத்திரம் பகுதியில் கண்வலி கிழங்கு கொள்முதல் நிலையம் அமைத்து, அரசே உரிய விலைக்கு கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன்மூலம் ஆயிரக்கணக்கான விவசாயிகள் பயனடைவர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பட்டிவீரன்பட்டி, : பட்டிவீரன்பட்டி ஐயப்பன் கோயிலில் சித்திரை விஷு பூஜை திருவிழா நடைபெற்றது. பட்டிவீரன்பட்டியில் உள்ள ஸ்ரீஐயப்ப சுவாமி கோயிலில் ஆண்டுதோறும் சித்திரை தமிழ் வருடப்பிறப்பு அன்று விஷு பூஜை திருவிழா நடைபெறும். சித்திரை மாத பிறப்பையொட்டி நேற்று விசு பூஜை வெகுவிமரிசையாக நடைபெற்றது. முன்னதாக ஸ்ரீமுருகன், ஸ்ரீவிநாயகர், ஸ்ரீமகாவிஷ்ணு, மஞ்சமாதா போன்ற

பரிவாரதெய்வங்களுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

அதைத் தொடர்ந்து ஸ்ரீஐயப்ப சுவாமிக்கு நெய், பால், தேன், பஞ்சாமிர்கம், சந்கனம் போன்றவற்றால் அபிஷேகம் செய்யப்பட்டகு. பின்னர் தாமரை மலர்கள் மற்றும் பழங்களால் ஸ்ரீஐயப்ப சுவாமிக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மகா தீபாராதனை காட்டப்பட்டகு. இதில் உள்ளூர் மற்றும் வெளியூரைச் சேர்ந்த பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். நிறைவாக பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளைகுருசாமிகள் மோகன்தாஸ், ஞானசேகரன், ஜெயராம், ஜெகநாதன் ஆகியோர் செய்திருந்தனர்.

## அணைப்பகுதியில் இரவு நேரங்களில் தங்க வேண்டாம்

பழநி, : பாலாறு அணையின் நீர்பிடிப்பு பகுதியில் இரவு நேரங்களில் விவசாயிகள் தங்க வேண்டாமென வனத்துறையினர் எச்சரித்துள்ளனர். பழநி வனப்பகுதியில் ஏராளமான காட்டு யானைகள் உள்ளன. வனப்பகுதிக்குள் போதிய நீர் மற்றும் உணவு இல்லாததால் யானைக்கூட்டம் அடிக்கடி வனப்பகுதி அருகில் உள்ள அணைகளுக்கு வந்து நீர் அருந்துவது வழக்கம். போதிய நீர் இல்லாததால், அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் ஆக்கிரமிப்பு செய்து நிலக்கடலை போன்ற குறுகிய கால பயிர்களை பயிரிட்டுள்ளனர்.

இதனை யானைக்கூட்டம் நாசம் செய்யாமல் இருக்க விவசாயிகள் இரவு, பகலாக காவல் இருந்து வருகின்றனர். மேலும் யானைகளை விரட்ட பட்டாசு வெடித்தல், அதிக ஒளிச்செறிவு கொண்ட விளக்குகளை பயன்படுத்துதால் போன்ற முயற்சிகளில் ஈடுபடுகின்றனர்.இந்த நடவடிக்கையால் கோபம் கொல்லும் யானைகள், விவசாயிகளை விரட்டுகின்றன. இதுவரை பாலாறு அணைப்பகுதியில் யானை தாக்கி 3 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர். தற்போது யானைக்கூட்டம் அணைப்பகுதிக்கு நீர் அருந்த அடிக்கடி வருகின்றன.

இதனால் மாலை நேரங்களில் அணைகளுக்குள் விவசாயிகள் இருக்க வேண்டாம் என வனத்துறையினர் எச்சரித்துள்ளனர்.

இதுகுறித்து வனத்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, ‘‘யானைகள் மாலை நேரங்களிலும், அதிகாலை நேரங்களில் தான் அணைக்கு வருகின்றன. இந்த நேரங்களில் விவசாயிகள், அணைப்பகுதியில் இருந்தால் யானைகளை விரட்ட முற்படுவர். இதனால் அசம்பாவிதம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, மாலை நேரங்களில் விவசாயிகள் அணைகளுக்குள் செல்ல வேண்டாமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. தவிர, வன அலுவலர்கள் மற்றும் வேட்டை தடுப்பு காவலர்களை கொண்டு யானைகளின் நடமாட்டத்தை தீவிர கண்காணித்து வருகிறோம்’’ என்றனர்.

## சூரியகாந்தியில் பூச்சி மேலாண்மை செய்வது எப்படி?

பழநி, : சூரியகாந்தியில் பூச்சி மேலாண்மை செய்வது குறித்து வேளாண்துறை சார்பில் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் சாகுபடி செய்யப்படும் முக்கிய எண்ணெய் வித்து பயிர்களில் நிலக்கடலை, எள், ஆமணக்கு, சூரியகாந்தி ஆகியவை முக்கிய பயிர்களாக விளங்குகின்றன. தமிழகத்தில் சுமார் 5.02 லட்சம் ஹெக்டேர்களில் எண்ணெய்வித்து பயிர்கள் மானாவாரியாகவும், இறவையிலும் சாகுபடி செய்யப்படுகின்றன. எண்ணெய் வித்து பயிர்களில் சூரியகாந்தி அதிகளவில் சாகுபடி செய்யப்படுபவை ஆகும். இதன் விளைச்சல் ஹெக்டேருக்கு சுமார் 2.15 டன்னாக உள்ளது.

தமிழகத்தில் நிலக்கடலை மானாவாரியில் பயிரிட ஏப்ரல்-மே, ஜூன்-ஜூலை, ஜூலை-ஆகஸ்டு பட்டங்கள் மிகவும் உகந்தவை. சூரியகாந்தி பயிரிட பாத்தி அமைத்தல், உரமிடுதல், நுண் ஊட்டமிடுதல், ஊட்டச்சத்து கலவை தெளிப்பு, விதை அளவு, விதை நேர்த்தி, களை கட்டுப்பாடு, பாசனம் ஆகியவற்றை வேளாண்துறையினிடம் ஆலோசனை பெற்று அதன்படி கடைபிடித்தால் நல்ல விளைச்சல் பெறலாம்.

அதுபோல், பூச்சி மேலாண்மையில் விவசாயிகள் அதிக அக்கறை காட்ட வேண்டும். கோடை மழைக்கு முன் வரப்புகளிலும், நிழலான இடங்களிலும், மண்ணில் புதைந்துள்ள கூட்டுப்புழுக்களை உழவு செய்து வெளிக்கொண்டு வந்து அழிக்க வேண்டும். விளக்குப்பொறி அல்லது தீப்பந்தம் வைத்து தாய் அந்திப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்க வேண்டும். பயிர்களில் இடப்பட்டுள்ள முட்டைகளை சேகரித்து அழிக்க வேண்டும்.தாக்கப்பட்ட வயல்களைச் சுற்றி 30 சென்டிமீட்டர் ஆழம் மற்றும் 25 சென்டிமீட்டர் அகலத்தில் செங்குத்தாக குழிகள் அமைத்து புழுக்கள் பாதிக்கப்பட்ட வயல்களில் இருந்து பரவுவதை தடுக்க வேண்டும்.

ஹெக்டருக்கு 25 கிலோ என்ற அளவில் பாசலோன் 4%, கார்பாரில் 10%, பெனிட்ரோதியான் 2% ஆகியவை கலந்து தெளிக்க வேண்டும். 1 ஹெக்டேருக்கு சூடோமோனாஸ் ஃப்புளூரசன்ஸ் 2.5 கிலோவுடன், 50 கிலோ மக்கிய தொழுவுரத்தை கலந்து தெளிக்க வேண்டும். மேலும், நோய் தென்படும் இடங்களில் கார்பன்டாசிம் லிட்டருக்கு 1 கிராம் என்ற அளவில் கலந்து தெளித்தால் பூச்சிகளின் தாக்குதல் இருக்காது. இதுதொடர்பான கூடுதல் தகவல்களுக்கு அந்தந்த பகுதி வேளாண் அலுவலர்களையோ அல்லது வேளாண் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

## குளிர்ச்சியும் ஆரோக்கியமும் தரும் வெள்ளரிக்காய்



உடலை குளிர்விக்கும் அற்புத ஆற்றலை கொண்ட வெள்ளரிக்காயில் அதிகளவு நீர்சத்து உள்ளதால் நாவறட்சியை போக்கும் தன்மை கொண்டது. உடல் உறுப்புகளான ஈரல், கல்லீரல் போன்றவற்றின் வெப்பத்தையும் போக்கும் ஆற்றல் வெள்ளரிக்காயில் உள்ளதால் கோடையின் சூட்டை தவிர்க்கும் நண்பனான திகழ்கிறது வெள்ளரிக்காய்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் தோன்றிய வெள்ளரிக்காய் ஆயிரம் வருடங்களுக்கு முன் தான் உலகநாடுகளுக்கு பயணம் செய்தது. ஆயினும் இன்று உலகளவில் பலரகமாய் வெள்ளரிக்காய் உலா வருகிறது. இங்கிலீஷ் வெள்ளரிக்காய், லெபனி

வெள்ளரிக்காய், தோசைக்காய், ஆப்பிள் வெள்ளரிக்காய், எகக்ரி, மஞ்சன் வெள்ளரிக்காய் என்றவாறு உலாவரும் வெள்ளரிக்காய் எங்கும், எந்நேரமும் சாப்பிட ஏற்றது.

விஞ்ஞானிகள் வெள்ளரிக்காயை பழ வகையில் சேர்த்துள்ளனர். ஆனால் மஞ்சள் காய்கறி அணிவரிசையில் சேர்த்துள்ளனர். இன்னும் கிராமபுறங்களில் மிகப்பெரிய வெள்ளரி பழங்கள் கோடைகாலத்தில் தாகம் தீர்க்கும் விதமாய் விற்பனைக்கு வருகின்றன. அவற்றின் சுவையும், புத்துணர்வும் அலாதி.

**வெள்ளரிக்காயின் அற்புத குணங்கள்:**

வெள்ளரிக்காயில் ஏதும் வைட்டமின்கள் இல்லை. ஆனால் தாது பொருட்களான சோடியம், பாஸ்பரஸ், இரும்பு, மக்னீசியம், கால்சியம், கந்தகம், சீலிசன், குளோரின் என்ற அணிவரிசையை வெள்ளரியில் அடக்கம்.

வெள்ளரிக்காய் 100 கிராமில் 18 கிராம்தான் கலோரி கிடைக்கும். வெள்ளரி பிஞ்சை அழுத்தும் போதும் திரிதோஷமும் போகும் என வைத்திய நூல்கள் கூறுகின்றன.

இரத்தத்தில் சிவப்பணுக்களை உருவாக்கும் பொட்டாசியம் மிகுதியாக உள்ளது. மூளைக்கு புத்துணர்வும், கபால சூட்டை தவிர்க்கவும் வெள்ளரிக்காய் உதவுகிறது. மூளைக்கு மிக சிறந்த வலிமையும் தருகிறது. சமீபத்திய ஆய்வின்படி வெள்ளரிக்காய் உண்ணும்போது பசி ரசம் என்ற கீரண நீர் அரக்கிறது. இது செரிமானத்தை அதிகரித்து பசியை தூண்டும் தன்மை கொண்டதாம்.

பித்தம் சார்ந்த நோய்களான பித்த வாந்தி, பித்தநீர், தலைசுற்றல் உள்ளவர்கள் வெள்ளரிக்காயை உண்ணலாம். நீரிழிவு நோயாளிகள் வெள்ளரிக்காயை, வெள்ளரி விதைகளை உண்ணும்போது அந்நோய் மட்டுபடும். வெள்ளரிக்காய் சிறுநீரகத்தை பாதுகாத்து, சிறுநீரக பிரச்சினைகளை தீர்க்கவல்லது.

**சமைக்க வேண்டாம்-பச்சையாகவே சாப்பிடலாம்:**

வெள்ளரிக்காயை பெரும்பாலும் அனைத்து தரப்பினரும் பச்சையாகதான் சாப்பிடுகிறார்கள். அதன் சுவையும், ருசியும் அலாதியானது. வெள்ளரிக்காய் கோடைகாலத்தில் உடல் சூட்டை தவிர்க்க உதவுவது எனினும் அனைத்து பருவங்களிலும் சுலபமாக கிடைக்கின்ற காய்கறி.

வெள்ளரிக்காயை சமைத்து சாப்பிடும்போது அதில் உள்ள பாஸ்பரஸ், பொட்டாசிய உப்புகள் அழிந்து விடும். எனவேதான் வெள்ளரி ஜூஸ், வெள்ளரி சாலட், என்றவாறு சமைக்காத உணவுகளாய் பெரும்பாலும் உண்கின்றனர்.

**ஜப்பானிய வெள்ளரி சாலட்:**

வெள்ளரிக்காய் சாலட் நாம் அனைவரும் சாப்பிட்டு இருப்போம். இந்த ஜப்பானிய வெள்ளரி சாலட் செய்வது மிக சுலபம். வெள்ளரிக்காயை மெல்லிய வட்டவடிவ துண்டுகளாய் சீவி கொண்டு அதில் கால் டிஸ்பூன் ரைஸ் வினிகர், 1 டிஸ்பூன் சர்க்கரை, Ð டிஸ்பூன் உப்பு, இரண்டு டேபிள் ஸ்பூன் வறுத்த வெள்ளை தூல், கலந்து அப்படியே பரிமாறலாம். வெள்ளை எள் கலந்து இருப்பதால் அதிக இரும்பு சத்து கொண்ட வெள்ளரி சாலட் ஆக திகழ்கிறது.

**ஸ்ட்ரா-பெர்ரி-வெள்ளரி ஜூஸ்:**

உடலுக்கு புத்துணர்வும், ஆரோக்கியமும் நிறைந்த ஸ்ட்ரா பெர்ரியும் வெள்ளரிக்காய், கேரட், ஆப்பிள் கலந்த குளிர்ச்சியான ஜூஸ். 1 பெரிய வெள்ளரிக்காய், 6 ஸ்ட்ராபெர்ரி, 1 ஆப்பிள், 2 கேரட் இவைகளை துண்டுகளாக நறுக்கி ஜூஸரில் போட்டு அரைத்து தேவைப்பட்டால் ஐஸ்கட்டிகளை போட்டு பருகலாம்.

**தர்பூசணி வெள்ளரி ஜீஸ்:**

தர்பூசணி துண்டுகள் 3 கப், வெள்ளரிக்காய் துண்டு 3 கப், கால் கப் எலுமிச்சை சாறு, புதினா இலை கொஞ்சம் இவை நான்கையும் ஜீஸரில் போட்டு அரைத்து வடிகட்டி அப்படியே அருந்தலாம். தேவையெனின் சர்க்கரையும், ஐஸ்கட்டியும் சேர்த்து பருகிடலாம்.

வெள்ளரிக்காய் ஜீஸ்களையும், சாலட்களையும் அருந்தும்போது உடல் குளுமை அடைவதுடன் உடல் சார்ந்த பல பிரச்சினைகள் ஏற்படாமலும் பாதுகாக்கும்.

## பழங்கள் விலை 'கிடுகிடு' உயர்வு ஆரஞ்சு கிலோ ரூ.160-க்கு விற்பனை



தமிழ் புத்தாண்டு கனி காணும் வைபவத்தை முன்னிட்டு நேற்று குமரி மாவட்ட பழக்கடைகளில் பழங்களின் விலையில் உயர்வு ஏற்பட்டது.

கனி காணும் வைபவம்

தமிழ்ப்புத்தாண்டு தினம் இன்று (வியாழக்கிழமை) உலக தமிழர்களால் கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. இதை முன்னிட்டு கோவில்களில் சிறப்பு பூஜை நடக்கிறது. குமரி மாவட்டத்தில் தமிழ்ப்புத்தாண்டு தினத்தை மக்கள் உற்சாகமாக கொண்டாடுவார்கள். தமிழ்ப்புத்தாண்டையொட்டி கனி காணும் வைபவம் இங்கு பிரசித்தம்.

பழவகைகளை சாமிபடம் மற்றும் கண்ணாடி முன் படைத்து, காலையில் அதில் கண் விழிப்பதே கனி காணும் வைபவம் ஆகும். இந்த நிகழ்ச்சிக்காக குமரி மாவட்ட மக்கள் பழ வகைகளை வாங்க பழக்கடைகளில் குவிந்தனர். கனி காணும் வைபவத்துக்காக வியாபாரம் அதிகமாக நடக்கும் என்று கருதி, பழங்களின் விலையையும் வியாபாரிகள் உயர்த்தி விட்டனர்.

கிலோ ரூ.160

நாகர்கோவிலில் உள்ள கடைகளில், குறிப்பிட்ட ஒரு ரக ஆப்பிள் கடந்த 2 நாட்களுக்கு முன்பு ரூ.140-க்கு விற்றது. ஆனால் நேற்று அது கிலோவுக்கு ரூ.20 உயர்ந்தது. இதைப்போல கொட்டை இல்லாத வெள்ளை திராட்சை முன்பு கிலோ ரூ.120-க்கு விற்றது. ஆனால் நேற்று கிலோ ரூ.160 ஆனது. பழவகைகளில் குறிப்பிடும்படியாக ஆரஞ்சு பழத்தின் விலையேற்றம் மக்களை மூக்கில் விரலை வைக்க வைத்தது. கடந்த மாதம் கிலோ ரூ.40-க்கு விற்ற ஆரஞ்சுப்பழம் நேற்று கிலோ ரூ.160 ஆக உயர்ந்தது.

நாகர்கோவில் கணேசபுரம் சந்தையில் ஆப்பிள், ஆரஞ்சு, மாதுளை ஆகிய பழங்கள் கிலோ தலா ரூ.160-க்கு விற்றன. மாம்பழம் ஒரு கிலோ ரூ.100-க்கு விற்றது. பழங்களின் விலை இப்படி உயர்ந்த போதிலும், மக்கள் விலையைப் பார்க்காமல் பழவகைகளை குறைந்த அளவாவது வாங்கிச் சென்றனர். இதை பயன்படுத்தி சில கடைக்காரர்கள் அனைத்து பழங்களையும் சேர்த்து ஒரு கிலோ ரூ.160-க்கு விற்றனர்.

**மேலூர் அருகே உள்ள வெள்ளலூர்நாட்டில் வெற்றிலைபிரி திருவிழா தமிழ் புத்தாண்டில் விவசாயம் செழிக்க நடத்தினர்**



மேலூர்,
தமிழ் புத்தாண்டில் விவசாயம் செழிக்க வேண்டும் என்று மேலூர் அருகே உள்ள வெள்ளலூர்நாட்டில் வெற்றிலைபிரி என்ற வினோத திருவிழா நடைபெற்றது.

வெள்ளலூர்நாடு

மதுரை மாவட்டம் மேலூர் அருகே தமிழ்புத்தாண்டையொட்டி வெள்ளலூரில் 56 கிராம மக்கள் ஒன்றுகூடி வெற்றியின் சின்னமாக வெற்றிலைகளை ஒவ்வொரு குடும்பத்துக்கும் பிரித்து கொடுக்கும் வினோத திருவிழா நடந்தது. வெற்றிலைபிரிகளை கிராமமக்கள் தங்களது வீடுகளுக்கு எடுத்து சென்று வணங்கி விவசாயபணிகளை தொடங்கும் பாரம்பரிய திருவிழா நேற்று நடைபெற்றது.

வெள்ளலூர் கிராமத்தை தலைமையாக கொண்டு சுற்றுவட்டாரத்தில் உள்ள 56 கிராமங்கள் வெள்ளலூர்நாடு என பல நூறு ஆண்டுகளாக அழைக்கப்படுகிறது. வெள்ளலூர் நாட்டில் வெள்ளலூர், அம்பலகாரன்பட்டி, உறங்கான்பட்டி, குறிச்சிப்பட்டி, வெள்ளமலம்பட்டி என 5 மாகாணங்கள் பிரிக்கப்பட்டுள்ளது.

11 பிரிவு மக்கள்

இப்பகுதி மக்களை மூண்டவாசி, வேங்கைப்புலி, சமட்டி, நைக்கான், சாவடைதாங்கி, வெக்காளி, சலிப்புளி, திருமான், செம்புலி, நண்டன்கோபாலன், பூலமறவராயன் என 11 கரைகளாக (பிரிவுகள்) அழைக்கப்படுகின்றனர். 56 கிராமங்களை நிர்வகிப்பதற்காக ஒவ்வொரு கரைக்கும் தலா ஒரு அம்பலகாரர், ஒரு இளங்கச்சி என்றழைக்கப்படுபவர்கள் தேர்வுசெய்யபடுகின்றனர்.

ஆண்டுதோறும் தமிழ் புத்தாண்டு தினம் சித்திரை முதல் நாளன்று 56 கிராம மக்களின் முதல் தெய்வமாக போற்றப்படும் வெள்ளலூர் கருங்கல் மந்தையில் உள்ள கோவில் அருகே ஒன்று கூடினர். அங்கு தமிழ் எழுத்து ப வடிவில் அம்பலகாரர்களும், இளங்கச்சிகளும் அமர்ந்து வேண்டுதல் நடத்தினர்

வெற்றிலைபிரி திருவிழா

பின்னர் கோவில் முன்பு குவித்து வைக்கப்பட்ட வெற்றிலை கட்டுகளை பிரிகளாக வைத்து வழிபட்டனர். தொடர்ந்து விவசாய பணிக்கு முக்கிய உதவிகள் செய்பவர்களுக்கு முதலில் வெற்றிலைக்கட்டுபரிகள் வழங்கப்பட்டன. பின்னர் பாரம்பரிய வழக்கபடி 56 கிராமத்தினருக்கும் வெற்றிலைபிரி கட்டுகள் பிரித்து வழங்கபட்டன.

வெள்ளலூரில் பிரிக்கப்பட்ட வெற்றிலைபிரிகட்டுகள் 56 கிராமங்களுக்கும் எடுத்து செல்லப்பட்டு அங்கு ஒவ்வொரு குடும்பத்துக்கும் தனித்தனியாக பிரித்து வினியோகம் செய்யப்பட்டன.

அந்த வெற்றிலைகளை வீட்டின் பூஜை அறையில் வைத்து கலப்பை, மண்வெட்டி, கடப்பாரை, அரிவாள், நெல்மரக்கால் ஆகியவற்றையும் உடன் வைத்து வணங்கிய பின்பு வயலுக்கு சென்று நிலத்தை உழுது விவசாய பணிகளை தொடங்கினர்.

இந்த திருவிழா நடைபெற்றவுடன் நல்ல மழை பொழிந்து, விவசாயம் வெற்றிகரமாக செழித்து நடைபெறும் என்பது இந்த பகுதி மக்களின் நம்பிக்கை ஆகும்.

**வைகை அணையின் நீர்மட்டம் குறைந்ததால் வலையில் சிக்கும் ஆரால் மீன்கள் 1 கிலோ ரூ.120–க்கு விற்பனை**



தேனி

வைகை அணையின் நீர்மட்டம் குறைந்து உள்ளதால் அணையில் மீன் பிடிக்க விரிக்கப்படும் வலையில் அதிக அளவில் ஆரால் மீன்கள் சிக்கி வருகின்றன. இவை 1 கிலோ ரூ.120–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

<u>வைகை அணை</u>

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி அருகே வைகை அணை அமைந்து உள்ளது. இந்த அணையின் மொத்த உயரம் 71 அடி ஆகும். இந்த அணையில் மீன் வளத்துறை சார்பில் மீன் குஞ்சுகள் விடப்பட்டு, மீன்கள் வளர்க்கப்படுகின்றன. இந்த மீன்களை பரிசலில் சென்று வலை வீசி, மீனவர்கள் பிடித்து வருகின்றனர். ஏராளமான மீனவர்கள் இந்த மீன்பிடி தொழிலை வாழ்வாதாரமாக கொண்டுள்ளனர்.

மீனவர்கள் பிடிக்கும் மீன்களில் மீன்வளத்துறை மற்றும் மீன் பிடிக்கும் மீனவர்களுக்கு சரிபாதியாக பங்கிட்டுக் கொள்கின்றனர்.

மீனவர்கள் தங்களுக்கான மீன்களை சில்லறையிலும், அதிக அளவில் வெளியூர்களுக்கு மொத்த வியாபாரத்திற்கும் அனுப்பி வைத்து

வருகின்றனர். மீன் வளத்துறைக்கான மீன்கள் அணையில் வைத்தே விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தினமும் காலை நேரத்தில் பொதுமக்கள் பலர் இங்கு வந்து மீன்கள் வாங்கிச் செல்கின்றனர்.

<u>ஆரால் மீன்கள்</u>

அணைக்கு கடந்த சில மாதங்களாக குறைந்த அளவே நீர்வரத்து உள்ளது. அணையின் நீர்மட்டமும் 36 அடிக்கு கீழ் குறைந்து விட்டது. நீர்மட்டம் குறைந்து உள்ளதால் மீனவர்கள் வீசும் வலைகளில் அதிக அளவில் மீன்கள் சிக்குகின்றன. கடந்த சில நாட்களாக தினமும் சுமார் 500 முதல் 700 கிலோ வரை மீன்கள் பிடிபடுகின்றன. தண்ணீர் அதிகமாக இருக்கும் நேரங்களில் கட்லா, ரோகு, ஜிலேபி போன்ற மீன்கள் பிடிபடும். தண்ணீர் குறையும் போது தான் ஆரால், உழுவை போன்ற மீன்கள் சிக்கும். தற்போது நீர்மட்டம் குறைந்து உள்ளதால் ஆரால் மீன்கள் அதிக அளவில் பிடிபடுகின்றன.

இந்த மீன்களை பலர் விரும்பி சாப்பிடுவார்கள் என்பதால் இதற்கு தனி கிராக்கி உள்ளது. பிடிபட்ட சில நிமிடங்களில் இவற்றை மக்கள் வாங்கிச் செல்கின்றனர். இந்த மீன்கள் 1 கிலோ ரூ.120–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதேபோன்று பெரிய அளவிலான கட்லா மீன்களும் சிக்கி வருகின்றன. நேற்று மீனவர் ஒருவர் வீசிய வலையில் சுமார் 8 கிலோ எடை கொண்ட கட்லா மீன் சிக்கியது. நீர்மட்டம் இன்னும் குறையும் போது, தினமும் சுமார் ஆயிரம் கிலோவில் இருந்து 1,300 கிலோ வரை மீன்கள் பிடிபட வாய்ப்பு உள்ளதாக மீன்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.